செயல்படத் தொடங்கும். எல்லா வகை மீன்களும்தான் உற்பத்தி செய்யப்படும். கட்லா ஃபிஷ்களும் உற்பத்தி செய்யப்படும். கெண்டை மீன்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

இராதாபுரம் கால்வாயிலிருந்து நீர் வழங்கல்

* 279 வினு.—திரு. வீ. கார்த்தீசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சானலில் புதிதாக உதயத்தூர் விஜயபதி கிராமங்களில் அடங்கிய குளங்களை சேர்ப்பதற்கென அங்குள்ள விவசாயிகள் அண்மையில் அரசிடம் அனுமதி கேட்டுள்ளனரா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1971–ம் வருடம் செப்டம்பர் மாதம் அனுமதி கேட்டனர்.

திரு. வீ. கார்த்திசன் : தலைவரவர்களே, அதிக நஞ்சை நிலங்கள் உள்ள இராதாபுரம் பகுதியில் உள்ள குளங்களுக்குப் போதிய தண்ணீர் விடுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே சேர்க்கப்பட்ட ஆயக்கட்டிற்குப் போக மீதித் தண்ணீர் இருந்தால் மேற்கொண்டு ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் விடுகிறார்கள். இதில் குறைந்தது ஐந்து பாசன காலத்திற்காவது பரிசோதனை நடத்தியாக வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது இராதாபுரம் கால்வாயில் தண்ணீர் விடுவதற்கு தனிப்பட்ட சிறப்பு விதிகள் ஏதேனும் பிறப்பிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் அந்த விவரப்படி இன்னும் அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனிப்பட்ட சிறப்பு விதிகள் விதிக்கப்பட்டதாகத் தகவல் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

* வினு 280.—திரு. ச. சங்குமுத்துத் தேவா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் கால்வாய் பாசன விவசாயிகளிடமிருந்து பாசன வசதி கோரி 1973–ம் வருடம், செப்டம்பர் மாதத்தில் மனுக்கள் எவையேனும் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?